
# வ.உ.சி கண்ட பாரதி




10186

## ஜி. யூ. போப்பையர்

தமிழுக்கு உழைத்த ஆங்கில அறிஞரின் வாழ்க்கையும் தமிழ்த் தொண்டும் தமிழ்ச் சுவை மிகுந்த நடையில் விளக்கப்பெறுகின்றன. இதுவரை தமிழ்நாடு அறியாத பல செய்திகளையும் ஆசிரியர் அருள் தங்கையா சேகரித்துத் தந்திருக்கிறார். "தமிழ் மாணவர்" என்று தம்மைப் பெருமையுடன் சொல்லிக் கொண்ட போப்பையர் தமிழ் மாணவர்களுக்கெல்லாம் ஒரு நல்ல வழிகாட்டி.

ரூ. 1—4—0



வி. ஓ. சி. சிறை செல்லு முன்

# முன்னுரை

---

அமரகவி சி. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி எனது தந்தையார் வி. ஓ. சிதம்பரம் பிள்ளையவர்கள் பல ஆண்டுகட்குமுன் எழுதிய குறிப்புகள்தான் **வ. ஓ. சி. கண்ட பாரதி** என்ற நூலாக மலர்ந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு இந்நூல் நல்விருந்தாகும் என நம்புகிறேன்.

சென்னை,
*17-11-1946.*

**வ. உ. சி. சுப்பிரமணியம்,**
**உதவி ஆசிரியன், "தினமணி".**

முதற்பதிப்பு—நவம்பர் 1946

விலை ரு. 1/-

Printed at Thompson & Co Ltd (Minerva Press)
33, Broadway, Madras (P. I. C No. Ms. 15)
Published by Madras Premier Co
3, Perianna Maistri Street, Madras (P I C No Ms. 39-a)

# வி. ஓ. சி. கண்ட பாரதி

## பாரதிக்கும் எனக்கும் பழக்கம்

பாரதியாரின் தந்தை ஸ்ரீ சின்னச்சாமி ஐயர் எட்டையபுரம் சமஸ்தானத்தில் உத்தியோகம் வகித்துவந்தார். அதே காலத்தில் எனது தந்தையார் ஸ்ரீ வ. உலகநாத பிள்ளை அதே சமஸ்தானத்தில் வக்கீலாக சேவை செய்துகொண்டிருந்தார். என் தகப்பனருடன் பாரதியாரின் தந்தையார் எங்கள் சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரத்திற்கு அடிக்கடி வருவதுண்டு.

எங்கள் ஊர் சரித்திரப் பிரசித்தமானது. 'மானம் பொழியுது, பூமி விளையுது; மன்னவன் காணிக்குக் கிஸ்தி ஏது?' என்று முழங்கி ஆங்கிலக் கும்பினியாரோடு அருஞ்சமர் புரிந்து பெரும்புகழ் எய்திய பாஞ்சாலங்

குறிச்சிப் பாளைய மன்னன்-வீரன், கட்ட பொம்மு காலத்தில் ஓட்டப்பிடாரம் சீரும் சிறப்பும் பொருந்திய சிற்றூராகத் திகழ்ந்தது. பின்னர் சமீப காலம்வரை ஓட்டப்பிடாரத்தில் தாலூகாக் கச்சேரியும், தாலுகா மாஜிஸ்டிரேட் கோர்ட்டும் இருந்துவந்தன.

இவ்விரண்டு கச்சேரிகளில் ஏதாவது ஒன்றில் 'ஜோலி'யாகவே எங்களூருக்கு ஸ்ரீமான் ஐயர் என் தந்தையாருடன் வருவார்.

அங்குவந்த காலத்தில் என் வீட்டிலாவது, என் வீட்டிற்கு மேற்கேயுள்ள பழைய பாஞ்சாலங்குறிச்சித் தானாதிபதிப் பிள்ளை வீட்டிலாவது தங்குவார். அப்பொழுது எனக்குப் பதினைந்து அல்லது பதினாறு வயதிருக்கும். ஸ்ரீமான் ஐயர் எந்தையாரிடமும், என்னிடமும் மற்றையோரிடமும் பேசிய மாதிரியிலிருந்து அவர் ஒரு பெரிய மேதாவி என நான் நினைத்தேன்.

என் தகப்பனார் என்னிடம் ஸ்ரீமான் ஐயருக்கு ஒரு மகன் இருப்பதாகவும்

அவன் அதி புத்திசாலி யென்றும், சிறு பிள்ளையா யிருக்கும்போதே தமிழில் வெகு அருமையாகச் சுயம் பாடுவான் என்றும் கூறுவதுண்டு. ஐயரது குமாரன் பாடிய கவிகளை என்னிடம் சொல்லிக் காட்டி அவனைப் பற்றி என் தந்தை வெகுவாகப் புகழ்ந்து பேசுவார். சிறு வயதிலேயே கவி பாடிய அச் சிறுபிள்ளை தான் சுப்பிரமணிய பாரதி என்று இன்று உலகமெல்லாம் புகழ்பெற்று விளங்கும் பெரியார்.

## முதல் சந்திப்பு

இப் பெரியாரை நான் முதன் முதலாகப் பார்க்கும் பாக்கியம் பெற்றது அவர் சென்னை யில், 'இந்தியா' என்னும் பெயர்பெற்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்த காலத்தில்தான். அந்தக் காலத்தில் 'இந் தியா'வுக்குப் பேரும் புகழும் பெருஞ்செல் வாக்கும் இருந்தன. பத்திரிகையின் சிறப் புக்குக் காரணம் ஆசிரியர் தான் என்பது சொல்லாமலே தெரியும்.

அது 1906-ம் வருஷ ஆரம்பமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். அப்போது நான் தூத்துக்குடியிலிருந்து சென்னை சென்றிருந்தேன். (எனது சொந்த ஊரான ஒட்டப்பிடாரத்திலிருந்து கச்சேரிகள் எல்லாம் எடுபட்டுவிட்டதனால் அப்பொழுது நான் தூத்துக்குடியில் வக்கீல் தொழில் புரிந்துவந்தேன்.) சென்னையில் திருவல்லிக்கேணியில் 'சுங்குராம செட்டி தெரு'வில் என் நண்பன் ஒருவன் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கிருந்து நான் பட்டணம் (Town) போகிற வருகிற வழியில் ஒரு பெரிய வீடு இருந்தது. அதுதான் 'இந்தியா' பத்திராதிபர் ஸ்ரீமான் திருமலாசாரியார் வீடு என்று தெரிந்து கொண்டேன்.

ஒரு நாள் மாலை நாலு மணி சுமாருக்கு நான் 'இந்தியா' அதிபர் திரு. ஆசாரியாரைப் பார்ப்பதற்காக அப் பெரிய வீட்டிற்குள் புகுந்தேன். அங்கிருந்தவர்களிடம் விசாரித்ததில், "அவர் மாடியில் இருக்கிறார்" என்றனர்.

நான் மாடிக்குச் சென்றேன்; அங்கு ஒரு அய்யங்கார் அமர்ந்திருந்தார். அவர் இள

வயதினராகக் காணப்பட்டார். முகத்தில் அறிவுச் சுடர் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர்தான் அதிபராக இருக்க வேண்டுமென நினைத்து அவரைக் கேட்டேன்.

"ஆம்" என்றார் அவர்.

அவரிடம் என் ஊரும், பேரும் சொன்னேன்.

அவர் மாடியின் உள்ளறையை நோக்கி, "பாரதி! உங்கள் ஊரார் ஒருவர் உம்மைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்" என்று உரக்கக் கூறினார்.

உடனே உள்ளிருந்து இருவர் வந்தனர். முண்டாசுக் கட்டுக்கும் முறுக்கு மீசைக்கும் பெயர் பெற்றது எங்கள் ஜில்லா. எனவே தலைப்பாகைக் கட்டைப் பார்த்ததுமே பாரதியார் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

முறைப்படி அதிபர் ஸ்ரீமான் ஆசாரியார், "இவர்தான் 'இந்தியா' ஆசிரியர் சுப்பிரமணிய பாரதி" எனப் பாரதியாரைச் சுட்டிக் காட்டி அறிமுகப்படுத்தினார்.

ஆசிரியர் பாரதியார் என் ஊரையும், பெயரையும் பற்றி உசாவினார்.

நான், "ஓட்டப்பிடாரம் வக்கீல் உலகநாத பிள்ளை மகன், சிதம்பரம் பிள்ளை" என்றேன்.

"ஓ, அப்படியா! பிள்ளையவாளின் பிள்ளையாண்டானு நீங்கள்! உட்காருங்கள்." என்று கூறி அருகிலிருந்த நாற்காலியில் அமரச்செய்தார். அவரும், மற்றவரும் வேறு இரு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டனர்.

பாரதியார் ஆரம்பித்தார்:

"உங்கள் தகப்பனார் என் தகப்பனாரின் அத்யந்த நண்பர். அவரை எனக்கு நன்றாகத் தெரியும். உங்களைப் பற்றியும் கேள்விப் பட்டிருக்கேன்," என்றார் பாரதியார். ஆமாம்! எங்கள் ஜில்லாவிற்கே உரித்தான அந்தச் சிறந்த தமிழ்ப் பாணியில் அவர் பேசினார். பின்னர் பலவேறு விஷயங்களைப் பற்றி நால்வரும்—குறிப்பாக நானும் அவரும் பேசிக்கொண்டிருந்தோம். தேச காரியங்கள் பற்றிய பேச்சுக்களே எங்கள் அளவளாவுதலில் தலைமை வகித்தன. இந்த முதல்

சந்திப்பும் பேச்சுமே என்னைச் சோழுகவும் அவரைக் கம்பனுகவும் நான் நினைக்கும்படி செய்தது. பாரதியார் என்னை கடற்கரைக்கு அழைத்தார். நாங்கள் நால்வரும் திருவல்லிக் கேணிக் கடற்கரைக்குச் சென்று வெகு நேரம் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக்கொண்டிருந்தோம். வங்க மாகாணத்தின் சிங்கச் செயல்கள் பற்றியும் விபினசந்திர பாலரின் தேசபக்தி, பிரசங்கங்கள் முதலியவை பற்றியும் பாரதியார் மிகுந்த ஆவேசத்துடன் பேசினர்.

என் உள்ளத்தில் மின்மினிப் பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்குப் போல ஒளிவிட்டுப் பிரகாசித்தது. உணர்ச்சிப் பெருக்கால் இங்கு எழுதியுள்ள இதே வாக்கியத்தை நான் பாரதியாரிடம் சொன்னேன். இதே சமயத்தில் கடற்கரை மின்சார விளக்குகளும் 'பளிச்'செனு ஒளிவிட்டு எரிய ஆரம்பித்தன.

பாரதி, "பிள்ளைவாள், சக்தி துணை செய்வாள். நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது

மின் ஒளியையும் பிரகாசிக்கச் செய்தது நம் அன்னை பராசக்தியே! அவள் வாழ்க! இனி நம் முயற்சி வெற்றி, எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுப சகுனம் இது தான். வாழி அன்னை! வாழி அம்மை!! சக்தி வாழி!" என ஆவேசம் வந்தவர் போலப் பேசினர். அவர் முண்டாசுக் கட்டின் முன்தானைத் துணி காற்றில் வெற்றிக்கொடி போலப் படபட வென்ற சப்தத்துடன் பறந்து கொண்டிருந்தது. கடல் அலை பேரிரைச்சல் விட்டது. உள்ளம் நிரம்பிய மகிழ்வோடு நாங்கள் நால்வரும் திரும்பினோம்.

பின்னர் நாள்தோறும் நான் 'இந்தியா' ஆபீசுக்கும், அதிபர் வீட்டிற்கும், கடற்கரைக்கும் செல்லலானேன்; அதிபரும், ஆசிரியரும் நானும் அவ்வப்போது அளவளாவுவது வழக்கமாகிவிட்டது. சுப்பிரமணிய பாரதியும் நானும் சோழனும் கம்பனுமாயிருந்தது மாறிக் கடைசியில் மாமனும் மருகனும் ஆயினோம்!'

## அன்னைக்கா ஆடு பலி?

ஒருநாள் மாலை. வழக்கம்போல நாங்கள் மூவரும் (பாரதி, ஆசாரியார், நான்) திருவல்லிக்கேணிக் கடற் கரையில் வார்த்தையாடிக் கொண்டிருந்தோம். எங்கெங்கோ சென்று கொண்டிருந்த எங்கள் பேச்சு வங்க வள நாட்டின்மீது திரும்பியது. அப்போது காளி தேவிக்கு வங்கத்தில் ஆடு பலி கொடுப்பதைக் கண்டித்து விபினசந்திரர் பேசிய பேச்சிற்கு மாமா உருக்கத்துடனும் ஆவேசத்துடனும் ஒரு வியாக்கியானம் செய்து முடித்தார் (இல்லை, 'பொழிந்து கொட்டினார்' என்று சொல்வது தான் பொருத்தம்). இவ் வியாக்கியானத்தைக்கேட்ட நான் கொழுத்த தேசாபிமானியாக மாறிவிட்டேன் (அதாவது இந்தக் காலத்திய தீவிரவாதி). இந்த வியாக்கியானத்தினால் நாங்கள் இருவரும் அதிகமாகப் பிணைக்கப்பட்டோம்; பெருமகிழ்ச்சி கொண்டோம். எங்கள் நட்பைப் பற்றி மாமா சொல்வார், "மாப்பிள்ளை, நமக்கினி யாரடா ஈடு?" என்று.

அதுமுதல் அவர் என் வீட்டிற்கு வருவதும் என்னோடு உண்ணுவதும் உறங்குவதும், நான் அவர் வீட்டிற்குப் போவதும் அவரோடு உண்ணுவதும் உறங்குவதுமாக இருந்தோம் : பிரான்ஸ், இத்தாலி இவை போன்ற பிற தேசங்களின் சரிதத்தை மாமா ஆதியோடந்தமாக ஆவேசத்துடன் கூறிமுடிப்பார். நான் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம். இடையிடையே ஏதாவது சந்தேகம் தோன்றினால் அவரிடம் கேட்பேன். அவர் காரணம் கூறி விளக்குவார்.

## கேட்டவுடனே பாட்டு!

ஒரு நாள் இத்தாலி நாட்டுத் தேசாபிமானி மாஜினியின் தேச ஊழிய வாலிப இத்தாலி சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்ந்தோர் செய்துவந்த விசுவாசப் பிரமாணச் செய்யுளை ஆங்கில பாஷையில் மாமா எனக்குப் படித்துக் காட்டினார். அதனைக்கேட்டதும் நான் சொக்கிப் போனேன்! அச் செய்யுளைத் தமிழ்ப் பாட்டாக மொழிபெயர்த்துத் தர மாமாவை வேண்டினேன். அவர் அன்றே அந்த

இடத்திலேயே அதைத்தமிழில் கவிதையாக மொழி பெயர்த்துத் தந்தார். அதுதான் "பேரருட் கடவுள் திருவடியாணை" எனத் தொடங்கும் பாட்டு.

பின்னர் நம் தேச ஆட்சியைச் சீக்கிரமே நாம் கைக்கொள்வதற்குச் செய்யவேண்டியவைகளைப் பற்றிப் பேசுவதே வழக்கமாகி விட்டது. தினம் ஒரு திட்டமிடுவதும் மறுநாள் மாற்றுவதும், மாற்றம் செய்தும் எங்கள் முயற்சிகளைப் 'பத்தரை மாற்றாக'ப் பக்குவம் செய்வதுமாயிருந்தோம். எங்கள் முயற்சிகளைப் பற்றி எங்கணும் பேசினோம், பிரசங்கம் புரிந்தோம். ஆனால் மாமா மட்டும் சொன்மாரி பொழிந்தார்.

தேசாபிமான ஊற்றென விளங்கும் திருவல்லிக்கேணிக் கோவில் பக்கத்திலுள்ள, மண்டையன் கூட்டத்தாராகிய திருமலையாசாரியார், ஸ்ரீநிவாஸாசாரியார் முதலியோரோடு அடிக்கடிப் பேசலானோம்; ஆலோசனை அனைத்தும் புரிந்தோம். அவ்வாலோசனையின் பயனாகத் திருவல்லிக்கேணியில் "சென்னை ஜன சங்கம்"

என்ற தேசாபிமானச் சங்கம் எழுந்தது. பின்னர் நான் எங்கள் யோசனைப்படித் தூத்துக்குடி திரும்பினேன்; தேச ஆட்சியின் மீட்சிக்கான வேலைகளில் ஈடுபட்டேன்.

# சூரத் காங்கிரஸில் தமிழர்கள்

1907-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் சூரத்தில் நடப்பதாயிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையில் தலைமை வகிப்பதற்குக் கல்கத்தாவிலிருந்த பெரிய சீமானும் பெயர் பெற்ற வக்கீலுமான ஸ்ரீ. ராஷ்பிகாரி கோஷ் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாயிற்று. அது நம் பாரதியாரின் கண்களிலும் படாமல் போகவில்லை. தேச சேவையே பெரிதென நினைத்துச் சிறந்த தொண்டாற்றியதன் காரணமாகத் தேசம் விட்டுக் கடத்தப்பட்டு அப்பொழுதுதான் விடுதலையடைந்திருந்த லாலா லஜபதிராயை அவ்வருஷத்துக் காங்கிரஸின் தலைவராக்க வேண்டுமென பாரதியார் நினைத்தார்; என்னைச் சென்னைக்குப் புறப்பட்டு வரும்படித் தந்தி கொடுத்தார். நான் சென்னை சென்றேன். மாமா, நான், மற்றும் தேசாபிமானிகள் எல்லோரும் ஒருங்கு

கூடி ஆலோசித்தோம். லாலா லஜபதிராயையே காங்கிரஸ் மகா சபைக்குத் தலைவராக்க வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்தோம். அதற்கான வேலைகளைச் செய்யும் பொறுப்பு மாமாவுக்கும் எனக்கும் அளிக்கப்பட்டது. அவ்வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றி வைப்பதன் பொருட்டு நான் அரசனாகவும் மாமா மந்திரியாகவும் மாறினோம்.

முதலில் ஸ்ரீமான் பால கங்காதர திலகரையும், பாபு அரவிந்தகோஷையும் எங்கள் கொள்கைக்கு இணங்கும்படிச் செய்யவேண்டுமென நினைத்தோம். அவ்விரு தேசாபிமானிகளுக்கும் கடிதங்கள் போன்ற நீண்ட தந்திகள் பல அனுப்பினேன். காங்கிரஸ் மகாநாட்டில் லாலா லஜபதிராய்க்குப் பெரும்பான்மையான வாக்குக்கள் (votes) கிடைக்கச் செய்வதற்காகச் சென்னை மாகாணத்திலிருந்தும் அநேக பிரதிநிதிகளைக் கூட்டிக் கொண்டுவர முடியுமாவெனக் கேட்டு அவர்கள் பதில் தந்தி அனுப்பினார்கள். அவ்வாறு செய்வதாக எனது வாக்குறுதி பெற்றுக் கொண்டு, "காங்

கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு லாலா லஜபதிராயைத் தலைவராக்க வேண்டுவதைச் செய்கிறோம்" என்று ஸ்ரீ திலகரும், கோஷும் எனக்கு முடிவான தந்தி அனுப்பினார்கள்.

## தலைவர் மாற்றத்திற்குக் கிளர்ச்சி

அது விஷயமாகத் திலகரது **கேசரி** பத்திரிகையிலும் பம்பாய் மாகாணத்தின் பிற தேசியப் பத்திரிகைகளிலும், ஸ்ரீ அரவிந்தரின் **வந்தேமாதரம்** பத்திரிகையிலும், வங்க மாகாணத்தின் இதர தேசியப் பத்திரிகைகளிலும் மற்றைய மாகாணங்களில் உள்ள தேசியப் பத்திரிகைகளிலும் பலமான கிளர்ச்சி செய்யப்பட்டது. சில மிதவாதிகள் தவிர மற்ற மிதவாதிகளும், அமிதவாதிகள் (தீவிரவாதிகள்) ஆகியோரும் தேசாபிமானிகளும் லாலா லஜபதிராயையே காங்கிரஸ் தலைவராக்கவேண்டுமெனப் பத்திரிகைகளில் எழுதித் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டார்கள். ஆரம்பத் தேதியும் நெருங்கியது. "ஏராளமான பிரதிநிதிகளுடன் நான் அத்தேதிக்குச் சில

தினங்களுக்கு முன்னரே சூரத் நகரம் வந்து சேரவேண்டும்'' என்று திலகர் பெருமானிடமிருந்து எனக்குத் தந்தி வந்தது.

சூரத்துக்கு ஸ்பெஷல் ரயில்

தூத்துக்குடியினின்று நான் சில நண்பர்களுடன் புறப்பட்டுச் சென்னை போய்ச் சேர்ந்தேன். மண்டையன் கூட்டத்தார் வீட்டில் "சென்னை ஜனசங்க''த்தின் அங்கத்தினர்களாகிய இளம் தேசாபிமானிகளை யெல்லாம் ஒரு கூட்டம் கூட்டி ஆலோசனை செய்தோம்.

பாரதிமாமா நூறு பிரதிநிதிகளுக்குக் குறையாமல் சென்னையிலிருந்து சூரத்துக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று சொன்னார்.

அப்பிரதிநிதிகளில் பணம் இல்லாதவர்களுக்குப் பணம் கொடுத்துக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றும், அவர்களைச் சூரத்திற்குக் கூட்டிப்போய் வருவதற்குரிய செலவுத் தொகையில் ஒரு பாதியை மண்டையன் கூட்டத் தலைவர், ஸ்ரீநிவாஸாசாரியும், மற்றொரு

பாதியை நானும் கொடுக்கவேண்டுமென்றும் எங்களுக்குள் முடிவு செய்துகொண்டோம். சுமார் நூறு பிரதிநிதிகளைக் கூட்டிக்கொண்டு வருவதாகத் திலகருக்குத் தந்தி கொடுத்தோம்.

அப்போது நடைமுறையில் (அமலில்) இருந்த காங்கிரஸ் மஹாசபையின் விதிப்படி சங்கங்களின் மூலமாகத்தான் காங்கிரஸுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வாறே பல சங்கங்கள் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துச் சென்னைக்கு அனுப்பும்படியாகத் தமிழ் நாட்டிலுள்ள பல நண்பர்களுக்குத் தகவல் கொடுத்தோம். அவர்களும் அவ்வாறே பல்வேறு ஊர்களிலிருந்து பல சங்கங்கள் மூலமாகப் பல பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்துச் சென்னைக்கு அனுப்பினர். அவர்களில் அநேகர் சாதாரண ரயில் வழியாக சூரத் சென்றனர். எங்கள் சென்னைத் தலைவர் ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் சென்னையிலிருந்து சூரத்துக்குச் சென்றார்கள். சென்னை ஜன சங்கத்தின் அங்கத்தினர்களாகிய

இளங்தேசாபிமானிகள் எல்லோரும் ஒரு பெரிய ரயில் வண்டியை பிரத்தியேகமாகப் பதிவு செய்து (Special Reserve) சென்னையி லிருந்து சூரத் சென்றோம். எங்களுடன் வந்த வர்களில் சென்னை அட்வகேட் ஸ்ரீமான் எஸ். துரைசாமி ஐயர், எம். ஏ. பி. எல்., ஸ்ரீமான் வி. சக்கரைசெட்டியார், பி. ஏ. பி. எல்., ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

**சூரத் காங்கிரஸ் உடைக்கப் பட்டது.**

பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகள் சூரத் நகருக்கு வெளியே காங்கிரஸ் கோட்டை யைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த கூடாரங் களில் தங்கியிருந்தோம். நகரின் நடுப்பாகத்தி லுள்ள மாளிகை (பங்களா)களில் திலகர் முத லிய பம்பாய் பிரதிநிதிகளும், வேறு சில மாளிகைகளில் அரவிந்தர் முதலிய வங்கப் பிரதி நிதிகளும் தங்கியிருந்தார்கள்.

காங்கிரஸ் பிரசிடெண்டாக(தலைவர்) வந்திருந்த ஸ்ரீ ராஷ்பிகாரி கோஷ் எழுதி அச்சிட்டுக் கொண்டு வந்திருந்த தலைமைப் பிரசங்

கத்தில் அப்போது 'அமிதவாதிகள்' என்று அழைக்கப்பட்ட திலகர், அரவிந்தர், பாரதியார் குழாத்தினரைப் பற்றி இழிவாகச் சில வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்ததாக நாங்கள் அறிந்தோம். அவற்றை அப் பிரசுரத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஸ்ரீ ராஷ்பிகாரிக்கு திலகரும், அரவிந்தரும் சிலரிடம் சொல்லி அனுப்பினர். நீக்குவதற்கு ஸ்ரீ கோஷ் இணங்கவில்லை. அவ்வாக்கியங்களைப் பிரசுரத்திலிருந்து நீக்காவிட்டால், காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ராஷ்பிகாரி தலைமை வகிக்கவேண்டுமென்ற பிரேரபணையை (Proposal)த் தாம் எதிர்க்கப் போவதாக திலகர் பெருமான் அப்போதைய மிதவாதத் தலைவர்களாகிய ஸர். பிரோஸிஷா மேத்தா, ஸ்ரீ கோக்கலே, வி. கிருஷ்ணசாமி ஐயர் முதலியவர்களுக்குச் சொல்லி அனுப்பினர். மிதவாதத் தலைவர்கள் பலரும்கூடி ஆலோசித்து பிரஸ்தாப வாக்கியங்களைப் பிரசுரத்திலிருந்து நீக்க முடியாதெனப் பதில் தெரிவித்து விட்டனர்.

பின்னர் பால கங்காதரர் (திலகர்) காங்கிரஸ் மஹாசபைக்காகப் பல்வேறு மாகாணங்களிலு மிருந்து வந்திருந்த தேசியக் கட்சிப் பிரதிநிதி களை யெல்லாம் சேர்த்து ஒரு கூட்டம் கூட்டி னார். நடந்த விஷயங்களை எடுத்துச் சொல்லி ஆலோசனை செய்யக் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீராஷ்பிகாரி அவ்வாக்கியங்களைத் தமது பிர சுரத்தினின்று நீக்காவிட்டால் அவர் (கோஷ்) தலைவராகவேண்டுமென்ற பிரேரேபணையை எதிர்க்கப் போவதாகவும், லாலா லஜபதிராய் தலைவராக வேண்டுமென்ற பிரேரேபணையைச் செய்யப்போவதாகவும் ஸ்ரீ அரவிந்தர், பாரதி யார் முதலியோர் கர்ஜித்தனர். கடைசியில் அவ்வாறே செய்வதென்றும் அதைத் திலகர் முன்னின்று நிறைவேற்றி வைக்கவேண்டு மென்றும் முடிவுசெய்யப்பட்டது.

வாழ்க திலகர் பெருமான்!

திலகருக்கும் ஏனைய தலைவர்களுக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றை இங்குக் குறிப்பிட வேண்டியது அவசியம் என நினைக்கிறேன்.

(இது இக்காலக் காங்கிரஸ் தலைவர்களது கண்ணிலும் படுவதாக!) அவர் எக்காரியத்தைச் செய்ய விரும்பினாலும், அக்காரியத்தைப் பற்றி முதலில் தம்முடைய சிஷ்யர்களைக் கலந்து ஆலோசனை செய்வார். தமது கருத்தும், அவர்களது அபிப்பிராயமும் மாறுபடுமாயினும் தமது அபிப்பிராயத்திற்கு அனுசரணையான விஷயங்களையெல்லாம் காரண காரியத்தோடு எடுத்துச் சொல்லி விவாதிப்பார். தமது அபிப்பிராயம் அவர்களால் நிராகரிக்கப்படுமாயின், தமது சிஷ்யர்களின் அபிப்பிராயப் படியே முடிவு செய்வித்து அதனையே தாம் முன்னின்று முடிப்பார்.

## உள்ளுக்குள்ளே ஒரு சூழ்ச்சி

மேலே கூறிய காங்கிரஸ் தலைவர் பிரேரேபணையைப் பற்றிய முடிவு மிதவாதத் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே அவர்கள் கூட்டம் கூடி ஆலோசனை செய்தார்கள். லாலா லஜபதிராய் அவ்வருஷத்துக் காங்கிரஸ் மகாசபையின் தலைமைப்

பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டால், திலகர் கட்சியினர் காங்கிரஸ் தலைவரைப் பற்றிய பிரேரேபணையை எதிர்க்கமாட்டார் என்ற முடிவுக்கு வந்தனர்.

இதன்படி அவர்கள் ஸ்லாலா லஜபதிராயை அழைத்து விஷயத்தை அவரிடம் தெரியப் படுத்தினார்கள். தம்மால் காங்கிரஸில் பிளவு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாக அவர் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டுத் திலகரிடம் வந்தார். நடந்ததைத் தெரியப் படுத்திக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் தலைவரைப் பற்றிய பிரேரேபணையை எதிர்க்காமல் விட்டு விடும்படி கேட்டார்.

தலைவர்-பிரசங்கப் பிரசுரத்தில் தம் கூட்டத்தினரைப் பற்றி கோஷ் எழுதியுள்ள இழி மொழிகளைத் திலகர் ஸ்ரீலஜபதிக்கு எடுத்துக் காட்டினார். அதனைப் படித்த அப்பெருந் தகைமையாளர் மிக வருந்தினார். தாம் மித வாதத் தலைவர்களை மீண்டும் கண்டு பேசி அவ்வாக்கியங்களைப் பிரசுரத்தினின்று நீக்கும்படிச் செய்வதாக வாக்குறுதி செய்து

போனார். ஆனால், அவருடைய பேச்சா மிதவாதத் தலைவர்களின் செவியில் ஏறப் போகிறது? இல்லை.

லஜபதிராய் திரும்பி வந்து நடந்ததைச் சொல்லி வருந்தித் தம் பெயரைத் தலைமை பதவிக்குப் பிரேரேபிக்க வேண்டாமெனக் கேட்டுக் கொண்டார்.

## காங்கிரஸ் மகாநாட்டில் கலாட்டா!

குறித்த நேரத்தில் குறித்த தேதியில் மஹா சபை கூடிற்று. காங்கிரஸ் தலைவரைப் பற்றிய பிரேரேபணையை எதிர்க்கவேண்டுமென்ற நோக்கமுடைய பாரதியார் முதலிய தேசிய வாதிகள் காங்கிரஸ் கொட்டகையினுள் பல பாகங்களிலும் உட்கார்ந்திருந்தோம். பிரம்மாண்டமான கொட்டகையில் எங்கு நோக்கினும் ஜனத்திரள். மத்தியில் பிரசங்க மேடை. 'எள் போட்டால் எள் விழாது' என்பார்களே, அம்மாதிரியான கூட்டம்.

வரவேற்புத் தலைவர் எழுந்து தமது வரவேற்புப் பிரசங்கப் பிரசுரத்தைப் படித்து

முடித்தார். பிரசங்க மேடையிலிருந்தவர்களில்
ஒருவர் எழுந்திருந்து ஸ்ரீ ராஷ்பிகாரி கோஷ்
மஹாநாட்டிற்குத் தலைமை வகிக்கவேண்டு
மென்று பிரேரேபித்தார். அங்கிருந்த மற்
றொரு மிதவாதத்தலைவர் எழுந்திருந்து அதை
ஆமோதித்தார்.

ஆமோதித்தது தான் தாமதம்! திலகர் பிர
சங்க மேடைமீது ஒரே தாவாகத் தாவினார்.
பிரேரேபணையைத் தாம் ஆட்சேபிப்பதாகத்
தெரிவித்தார். கூச்சல் கிளம்பிற்று. பலர் பல
வாறு திலகரைத் திட்டிக்கொண்டும், "உன்
இடத்திற்குப் போ! பேசாதே!" (Go to your
seat! Don't speak!) எனப் பேய்க்கூச்சலிட்டுப்
பெருங் குழப்பம் செய்தனர்.

தலைவரைப் பற்றிய பிரேரேபணையைத்
தாம் எதிர்ப்பதற்குரிய காரணங்களை எடுத்
துச் சொல்வதற்காகப் பல முறை திலகர்
எத்தனித்தார். மிதவாதிகளின் பெருங் கூச்
சலால் திலகர் வார்த்தைகள் காங்கிரஸ் பந்த
லில் பிரதிநிதிகள் இருந்த இடங்களுக்குக்
கேட்கவில்லை. திலகரோ தம்மைப் பேச விட்டா

லன்றிப் பிரசங்க மேடையை விட்டுப் போகப் போவதில்லையென்று கூறி, நின்ற இடத்திலேயே அசையாது கையைக் கட்டிக்கொண்டு சிங்கம்போல் நின்றுர்.

இச்சமயத்தில் ராஷ்பிகாரி கோஷ் பிரசங்க மேடை மேஜை மீது ஏறி நின்றுகொண்டு தமது தலைமைப் பிரசங்கத்தை 'விருவிரென' வாசிக்கத் தொடங்கினுர்.

பந்தலின் பல பாகங்களிலிருந்தும் மீண்டும் கூச்சல் கிளம்பிற்று. "இன்னும் உம்மைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவில்லை! உமது பிரசங்கத்தை வாசிக்க வேண்டாம்!" என்று பலர் கத்தினுர்கள்.

மிதவாதிகள் பிரசங்க மேடைமீது ஏறி வந்து குழுமி நின்றுகொண்டு திலகரை நோக்கி, "உம் இடத்திற்குப் போம்! உம் வாயைத் திறவாதேயும்!" (Go to your seat! Don't open your mouth!) என்று பெருங் கூச்சலிட்டார்கள்.

அப்போது அவர்கள் முன்பு திலகர் நின்ற நிலை, ஆஹா! இன்றும் அன்று போல என்

மனக் கண்ணில் தோன்றுகிறது. அன்று அவர் நின்ற நிலையை மதம் பொழிந்து கர்ஜித்துக்கொண்டிருந்த பல நூறு யானைகளின் முன் அமைதியுடன் வேண்டுமென்றே அடங்கி நின்ற சிங்க ராஜாவின் நிலைக்கு ஒப்பிடலாம்.

### காங்கிரஸ் கலைந்தது

அச்சமயத்தில் மேடை மீதிருந்த மிதவாதிகளில் சிலர் தாம் அமர்ந்திருந்த நாற்காலிகளைத் தம் தலைக்கு மேலே தூக்கித் திலகர் மேல் எறிய முயற்சித்தனர். காங்கிரஸ் பந்தலின் முன்னணியில் இருந்த ஸ்ரீ கபர்தேயும்; பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகளும் ஒரே பாய்ச்சலாய் மேடைமீது பாய்ந்து திலகரைச் சுற்றி வட்டமாக நின்றுகொண்டு அவர்மேல் எறியப்பட்ட நாற்காலிகளைத் தடுத்துப் பக்கத்தே தள்ளிக்கொண்டிருந்தனர். வேடிக்கை! அப்போதும் ராஷ்பிகாரி மூச்சு விடாமல் வாயு வேகத்தில் தமது பிரசங்கக் குறிப்பைப் படித்துக்கொண்டிருந்தார்!

சென்னைப் பிரதிநிதிகள், "உமது பிரசங்கத்தை வாசிக்கவேண்டாம்! போய் உட்காரும்!" என்று கூச்சல் போட்டனர்.

இந்தச் சமயத்தில் காங்கிரஸ் பந்தலின் பல மூலைகளிலும் முன்னரே ஒளித்து வைக்கப் பட்டிருந்த போக்கிறிகள் (Goondas) தடிக் கம்புகளுடன் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு மேடைக்குச் சென்றார்கள். பந்தலிலே அலை மோதியது!

மேடை சென்ற போக்கிறிகள் திலகரைச் சுற்றி அரண் போல நின்றுகொண்டு எறியப்பட்ட நாற்காலிகளைத் தடுத்துக் கொண்டிருந்த சென்னைப் பிரதி நிதிகளைத் தடியால் தாக்கிக் கீழே சாய்த்தனர். பார்த்தனர் பிரதிநிதிகள்! ஆர்த்தனர். பந்தரின் நாலா பக்கங்களிலிருந்தும் ஜோடுகளும், செருப்புகளும் குண்டர்களை நோக்கிப் பறந்தன. சில மிதவாதத் தலைவர்களுக்கும் அடி. நிலைமை கட்டுக் கடங்காது போகவே காங்கிரஸைக் கலைக்க வேண்டுமென்று போலீஸாருக்குத் தகவல் பறந்தது. போலீஸார் 'குபு குபு' வென

வந்திறங்கினர். காங்கிரஸ் பந்தர் தமது ஆளுகையிலிருப்பதாகவும், கால் மணி நேரத்திற்குள் எல்லோரும் பந்தரை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்றும் போலீஸார் அறிவித்தனர்.

உடனே மிதவாதத் தலைவர்கள் குண்டர்களோடும் சில பிரதிநிதிகளோடும் பந்தரை விட்டு வெளியேறிப் போய்விட்டனர்.

பிறகு, எங்கள் தலைவர்களும், நாங்களும் பந்தலை விட்டு வெளியேறி அரவிந்தர் தங்கியிருந்த பங்களாவுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

## தேசிய வாதிகள் மகாநாடு

திலகர், கபர்தே முதலிய பம்பாய்த் தலைவர்களும், பிரதிநிதிகளும், அரவிந்தர் முதலிய வங்க தேசத் தலைவர்களும் பிரதிநிதிகளும், பஞ்சாப் தேசத் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோரும், பாரதியார், துரைசாமி ஐயர், சக்கரைசெட்டியார், ஸ்ரீனிவாஸாசாரியார் முதலிய சென்னைத் தலைவர்கள், பிரதி நிதிகள் முதலியோரும் கூடி ஆலோசித்தோம். மறுநாள் மாலை சூரத் நகரிலுள்ள பெரியதோர் கட்டடத்தில் "தேசிய வாதிகள் மகாநாடு" ஒன்று கூட்டி மேல் நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசித்து முடிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### திலகரும் வைதீகமும்

இங்குத் திலகருடைய வைதிகக் கோட்பாடுகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டுவது அவசியமாயிருக்கிறது. தேசியத்

தலைவர்களும், பிறரும் அரவிந்தர் மாளிகை மாடியில் கூடி ஆலோசித்துக் கொண்டிருந்த போது திலகருக்கு ஒருவன் சாப்பாடு கொண்டு வந்தான். அவன் திலகரைப் பார்த்து வலது பக்கத்திலுள்ள தனித்ததோர் அறையைச் சுட்டிக்காட்டி, "அங்கே கொண்டு போய் வைக்கட்டுமா?" என்று கேட்டான். திலகர், "தேசபக்தர்களுக்குள்ளேயா ஜாதி வேற்றுமை? தம்பி, இங்கேயே வை" என்றார். திலகர், கபர்தே, பாரதியார், நான் முதலிய பல வேறு ஜாதிக்காரர்கள் ஒரே பந்தியில் வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டோம். எனவே, தேச பக்திக்கு வெளியேதான் திலகரது வைதிகக்கோட்பாடு எல்லாம் என்பது தெளிவு.

ஏற்கெனவே கூறியபடி மறுநாள் மாலையில் தேசிய வாதிகளின் மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீ அரவிந்தர் தலைமை தாங்கினார். இனி நடக்க வேண்டிய காரியங்களைப்பற்றிப் பல மாகாணத் தவரும் பிரசங்கித்தனர். மிதவாதிகளை விட்டுத் தனியே பிரிந்து தேசிய வாதிகள் வருஷந்தோ

றும் தனி மகாநாடு கூட்டி ஆலோசனை செய்து சுய ஆட்சி அடைவதற்கான வேலைத் திட்டங் களை வகுத்து வருஷம் முழுவதும் வேலை செய்து வரவேண்டுமென்று ஒரு தீர்மானம் செய்யப் பட்டது. இந்த மகாநாட்டில் பாரதி மாமா தான் முன்னின்று வேண்டுவன செய்தார். பல்வேறு மாகாணத்தவர்களுடனும் அவரவரது பாஷையில் பேசி அவர்களைத் தம் வழிப்படுத்தினர். மாமாவுக்கு ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு முதலிய பல பாஷைகள் தெரியுமெனப் பின்னால் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

நிறைவேறிய தீர்மானப்படி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு காரியதரிசியைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று முடிவாயிற்று.

பம்பாய் மாகாணத்திற்குத் திலகரும், வங்கத்திற்கு அரவிந்தரும், சென்னை மாகாணத்திற்கு நானும் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றோம். எங்கள் வேலைக்குத் திட்டங்களும் வகுக்கப்பட்டன.

பாரதியார் முதலிய சென்னைப் பிரதிநிதிகள் சென்னை வந்து சேர்ந்தோம். திருவல்லிக் கேணிக் கடற்கரையிலும், மூர்மார்க்கெட் முதலிய பல இடங்களிலும் நானும், மாமாவும் காங்கிரஸ் கலைபட்டது பற்றியும், தேசீய வாதிகள் மகாநாடு நிறுவப்பட்டது பற்றியும், அதன் வேலைத் திட்டங்கள் பற்றியும் பல பிரசங்கங்கள் தொடர்பாகச் செய்துவந்தோம்.

இந்தச் சமயத்திலெல்லாம் மாமாவும் நானும் ஈருடலும் ஓருயிருமாக வேலை செய்தோம் என்றால் மிகை யாகாது. எங்களைச் சிலர் ‘இரட்டையர்’ என்றே கேலியாகக் குறிப்பிடுவார்கள். என்னைக்கண்டால் மாமாவைக் காணலாம்; அவரைக் கண்டால் என்னைக் காணலாம். கொஞ்சகாலம் சென்றபின் நானும் எனது நண்பர்களும் தூத்துக்குடி சென்றோம். மாமா ரயில் வரைக்கும் வந்து வழியனுப்பினார்.

## "கதர்க் கப்பல் கொடி காணுதே"

**தேச** ஆட்சியின் மீட்சிக்கான முதல் வழி, வியாபாரம் செய்துவந்த வெள்ளையர்களை வெருட்டியடிக்க வேண்டும் என்பதுதான். வெள்ளையர்களை விரட்டுவதென்றால் நம்மவர்க்கு கடல் ஆதிக்கம் வேண்டும். ஒரு காலத்தில் மேற்கே உரோம் தேசத்திற்கும் கிழக்கே ஜாவா சுமத்ராவுக்கு அப்பாலும் **தமிழ்க் கப்பல்** போய்வந்தது. தமிழர் வாணிபம் சிறப்பாக விளங்கிவந்தது. அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். எனவே தமிழர்கள் மீண்டும் கடல்மேல் செல்வது எவ்வாறு என்பதாகத் திட்டமிட்டேன்.

இத்திட்டத்தின் விளைவுதான் **சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி.** எனது நண்பர்களின் நன் முயற்சியாலும் பொதுஜன ஆதரவாலும் சுதேசிக் கப்பல் கம்பெனி 1906-ம் ஆண்டில் நிறுவப்பட்டது.

கப்பல் கம்பெனியைக் கண்டு வெள்ளையர் வெருண்டெழுந்தனர். அவர்களின் வியாபார

மும் கடலாதிக்கமும் நாசமடையத் தொடங்கி யது. கப்பல் கம்பெனிக்குக் காரணஸ்தனென என்னைச் சிறைக்குத் தள்ள விரும்பினார்கள் வெள்ளையர்கள்.

சுதந்திர ஆட்சிக்காக நானும், சுப்பிரமணிய சிவாவும் இதர எனது நண்பர்களும் கிளர்ச்சி செய்து வந்ததும் வேறே வெள்ளையர்களுக்குக் கிலி பிடித்தது.

அப்போது அதிகாரத்திலிருந்த வெள்ளையர் களின் உதவியினால் என்னையும் எனது சகாக் களையும் சிறையில் தள்ளினால் சுதந்திரக் கிளர்ச்சி நின்றுவிடுமென எண்ணினர். வெள்ளை வியாபாரிகளின் தாசர்களான வெள்ளை அதிகாரிகள் என்மீதும், சிவாமீதும் எனது மற்றொரு நண்பர் பத்மநாப ஐயங்கார் மீதும் ராஜத்துவேஷ வழக்குத் தொடங்கினர். நாங்கள் இருவரும் 1909-ம் வருஷம் மார்ச்சு மாதம் 12-ம் தேதி கைது செய்யப்பட்டோம்.

நாங்கள் கைது செய்யப்பட்டதினால் ஆத்திர மடைந்த மக்கள் திருநெல்வேலியிலும், தூத்

துக்குடியிலும் பல அடாத செயல்கள் புரிந்தனர். இதற்குப் பயந்து தூத்துக்குடியிலிருந்த வெள்ளையர்கள் தங்கள் இரவுகளைக் கப்பலிலேயே சில நாள் கழித்தார்கள். கழிக்க வேண்டியது ஏற்பட்டது.

## நெல்லையில் பாரதியார்

வெள்ளையர்களின் அடக்குமுறை இதே சமயத்தில் இந்தியா முழுவதிலும் தாண்டவமாடிற்று. வங்காளத்தில் அரவிந்தர் மீதும், பம்பாய் மாகாணத்தில் திலகர் மீதும், சென்னை மாகாணத்தில் என் வகையார் மீதும் ராஜத்துவேஷ வழக்குகள் ஒரே சமயத்தில் தொடரப்பட்டன.

என் வகையர்கள் கைது செய்யப்பட்டதும், சென்னை நண்பர்களான ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாச்சாரி, சுப்பிரமணிய பாரதி முதலியோர் திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது நாங்கள் மூவரும் (சிதம்பரம், சிவா, பத்மநாப அய்யங்கார்) பாளையங்கோட்டை மத்திய சிறையில் விசாரணைக் கைதிமாராக இருந்தோம்.

சென்னை நண்பர்கள் எங்களைச் சிறையில் கண்டு உரையாடிக் களித்தனர்.

என்னைக் கண்டதும் மாமா அப்படியே ஆலிங்கனம் செய்துகொண்டார். அவர் கண்களில் நீர் மல்கியது. "பிள்ளைவாள்! என்ன காரியம் செய்து விட்டார்கள், பார்த்தீர்களா?" என்று மாமா அங்கலாய்த்தார். நான் சமாதானம் கூறி அவரைத் தேற்றினேன்.

அப்பொழுது தான் மாமா எனக்கும் கலெக்டர் விஞ்சு துரைக்கும் நடந்ததாக உருவகப்படுத்திக் கீழ்க்கண்ட பாடல்களை எழுதித் தந்தார்:

நாட்டிலெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய், கனல் மூட்டினாய்
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன், வலி காட்டுவேன்.

கூட்டங் கூடிவந் தேமாதர மென்று
கோஷித்தாய், எமைத் தூஷித்தாய்
ஓட்டம் நாங்க ளெடுக்க வென் றேகப்பல்
ஓட்டினாய், பொருள் ஈட்டினாய்.

கோழைப்பட்ட, ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய், சட்ட மீறினாய்
ஏழைப் பட்டிங் கிறத்த லிழிவென்றே
யேசினாய், வீரம் பேசினாய்.

அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய், புன்மை போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய், ஆசை யூட்டினாய்.

தொண்டொன்றே தொழி லாக்கொண்டிருந்தோரைத்
தூண்டினாய், புகழ் வேண்டினாய்
கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய், சோர்வை யோட்டினாய்.

எங்கு மிந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினாய், விதை தூவினாய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறு முயல்
செய்யவோ, நீங்கள் உய்யவோ?

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன், குத்திக் கொல்லுவேன்
தட்டிப்பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன், பழி கொள்ளுவேன்.

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம், இனி யஞ்சிடோம்;
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம் பார்க்குமோ?

வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம், முடி தாழ்த்துவோம்;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ? அவமானமோ?

பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளை கொண்டு
போகவோ? நாங்கள் சாகவோ?
அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ? உயிர் வெல்லமோ?

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ? பிடி வாதமோ?

பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ? மனஸ் தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ இதிற் செற்றமோ?

ஒற்றுமை வழியொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம், நன்கு தேர்ந்திட்டோம்,
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலாம்
மலைவுறோம், சித்தம் கலைவுறோம்.

சதையைத் துண்டு துண்டாக்கினு முன்னெண்ணம்
சாயுமோ? ஜீவன் ஓயுமோ?
இதையத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ? நெஞ்சம் வேகுமோ?

என் வகையார்கள் மீது கொண்டு வரப் பட்ட வழக்கில் எங்கள் பக்கம் வக்கீல்களாக ஆஜரான திருநெல்வேலி வக்கீல்களான சாது கணபதி பந்துலு, கணபதி ராமய்யர், டி. வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீவை குண்டம் டி. ஆர். மகாதேவய்யர், சிவராம கிருஷ்ணய்யர் முதலிய தேசபக்தர்களுடன் சாது கணபதி பந்துலு ஆபீஸ் மேடையில் மாமாவும், மற்றச் சென்னை நண்பர்களும் ஒரு வாரத்திற்கு மேலாகத் தங்கி வழக்கின் நடவடிக்கைகள், நடந்த வேடிக்கைகள் ஆகிய வற்றைப் பார்த்துத் தமாஷாகச் சம்பாஷணை

கள் செய்துகொண்டும் பாட்டுகள் பாடிக் கொண்டும் உல்லாஸமாகக் காலம் கழித்துக் கொண்டிருந்தனர்.

நான் சிறை செல்லும்போது காலஞ் சென்ற எனது மூத்தமகன் உலகநாதனுக்கு ஐந்து வயதிருக்கும். அவன் நான் போகுமிடங் களுக்கெல்லாம் என்னுடன் வந்து என் பிரசங் கங்களைக் கேட்டுக்கொண்டிருந்ததனால் அப் பொழுதே அழகாக என்னைப்போலப் பிரசங்கம் செய்வான். தொட்டில் பழக்கம்தானே!

உலகநாதனின் பிரசங்கத்தைக் கேட்டு மாமா ஆனந்தமடைவார்; ஆடுவார்; பாடுவார்!

"பயலே, அப்படிப்பேசு, அப்பாவுக்கு மிஞ்சின பிள்ளையா யிருக்கணுமடா; குட்டிச் சிதம்பரம் பிள்ளை நீதாண்டா" எனக் குழந்தை யுடன் மாமா கொஞ்சி விளையாடியதாக என் மனைவி நான் சிறையிலிருந்த பொழுது எனக் கொரு கடிதம் எழுதி அனுப்பினாள். அக் கடிதத்துடன் மாமா என் மகன் உலகநாதனைப்

பாராட்டிப் பென்சிலால் எழுதி அனுப்பிய ஒரு பாட்டும் இருந்தது. அதன் தலைப்பு "லோக நாயகி புதல்வன்" என்பதாக என் ஞாபகம். என் மகன் உலகநாதன் எப்படி எங்களை விட்டுத்தனது இருபத்திரண்டாவது வயதில் பிரிந்து வாழ்வை நீத்தானோ அதேபோல அந்தப் பாட்டு போன இடமும் தெரியவில்லை.

மாமாவும் சென்னை நண்பர்களும் ஒருவாரத்திற்கு அதிகமாக நெல்லையில் தங்கியிருந்து விட்டுச் சென்னை சென்றுவிட்டனர்.

எங்கள் மீது தொடரப்பட்டிருந்த ராஜத்துவேஷவழக்கில் நெல்லை அடிஷனல்செஷன்ஸ் ஜட்ஜ் * பின்னேயால் எனக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்குப் பத்து வருஷக்கடுங் காவல் தண்டனையும் விதிக்கப்பெற்றோம். ஹைகோர்ட்டு அப்பீலில் எங்கள் தண்டனைகள் குறைக்கப்பட்டன. வழக்கின் ஆரம்பத்திலேயே பத்மநாபய்யங்கார் விடுதலை செய்யப்பட்டார்.

*(A. F. Phinhey).

நான் எனது தண்டனையைக் கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலுமாகக் கழித்துவிட்டு 1912-ம் வருஷம் டிசம்பர் மாதம் விடுதலையடைந்தேன்.

புதுவையில் பாரதியார்

நெல்லையிலிருந்து பாரதியார் முதலியோர் சென்னைபோய்ச் சேர்ந்ததும், சென்னையில் சுரேந்திரநாத் ஆரியா மீது ராஜத்துவேஷ வழக்குத் தொடரப்பட்டது. மாமா பேரிலும், ஸ்ரீனிவாஸாச்சாரியார் பேரிலும் சர்க்கார் ராஜத்துவேஷ வழக்குத் தொடரப் போவதாகவும், அவர்கள் ஜெயில் செல்ல விரும்பவில்லையானால், புதுச்சேரிக்குச் சென்றுவிடும்படியாகவும் பாரதியாரின் தேசிய கீதங்களில் மயங்கிக் கிடந்த கவர்மெண்டு எக்ஸிக்யூட்டிவ் ஆபீஸர் ஒருவர் பாரதியாரிடம் தகவல் தெரிவித்துவிட்டார். சில காரணங்களால் அவர் பெயரை நான் இங்குசொல்ல விரும்பவில்லை. சிறையுள் கிடந்து தேசசேவை செய்யாதிருப்பதினும் வேறு தேசம் சென்று தேச சேவை செய்துகொண்

டிருப்பதே மேல் என நாங்கள் அவர்களுக்குத் தகவல் சொல்லி அனுப்பினேம். முதலில் மாமா இதற்கு ஒப்புக்கொள்ள வில்லை. பின்னர் மாமா புதுச்சேரி செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதினுல் சென்றுவிட்டார் போலும்!

புதுச்சேரியில் அரவிந்தர் முன்னரே வந்திருந்தார். வ. வே. சுப்பிரமணிய ஐயரும் போய்ச் சேர்ந்தார். நெல்லைக் கலெக்டர் ஆஷ் துரையைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வ தற்கு உடந்தையாக இருந்தவர் என அப் போது சொல்லப்பட்ட என் ஊர் (ஓட்டப் பிடாரம்) மாடசாமிப் பிள்ளையும் புதுவை புகுந்தார். இவ்விதமாக இந்திய தேசாபி மானிகள் பலர் புதுவையில் குடியேறி நிலை யாகத் தங்கிப் பத்திரிகைகள் வாயிலாகவும், வேறு வழிகளிலும் நமது தேச அரசாட்சியை மீட்பதற்குரிய வேலைகள் செய்துகொண்டி ருந்தனர். அவர்களிடம் தோன்றிய சுதந்திர ஜோதி தமிழ்நாடு முழுவதும் சுடர் வீசிக்

கொண்டிருந்தது. கண்ணனூர்ச் சிறையினின்றும் எனது தண்டனைக் காலம் கழிந்து விடுதலையடைந்த நான் என் குடும்பத்தோடு சென்னை வந்து தங்கியிருந்தேன். பாரதியார், ஸ்ரீநிவாஸாச்சாரி முதலிய சென்னைத் தேச பக்தர்களைக் காணவேண்டும் என்ற அவா எனக்கு மேலிட்டது.

## புதுவையில் பாரதி தரிசனம்

நான் புதுச்சேரிக்குச் சென்றேன். மாமா வீட்டை விசாரித்துக் கண்டு பிடித்து அங்கு போய்ச் சேர்ந்தேன். மாமாவின் மனைவி மக்களையும் கண்டு களித்தேன். அவருடன் தங்கி அடிசில் உண்டும், ஆவிநீர் குடித்தும், அவரது ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும், அக மகிழ்ந்து சின்னாள் கழித்தேன்.

மாமாவும் நானும் எங்கள் நண்பர் அரவிந்தர் மாளிகைக்குச் சென்றோம். பலர் என்னிடம் சொல்லியது போல அரவிந்தர் ஓர் ரிஷியாயிருக்கவில்லை, தேசபக்தராவும் தேசத்தலைவராகவுமே விளங்கினர்.

தேச அரசாட்சியை மீட்பதற்குரிய பல வழிகளைப் பற்றி மீண்டும் பேசினோம். வழக்கமாக இவ்வாறு நடந்து வந்தது. ஒரு நாள் மாலையில் அரவிந்தர் மாளிகையில் உலக முழுவதிலும் நமது சுதந்திரக் கிளர்ச்சியைப் பரப்ப வேண்டுமென்பது குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். இது சம்பந்தமாக அரவிந்தரிடம் நான் இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகைகள் நடத்த வேண்டும் என்றும் அதற்கான பணத்தைச் சுலபமாகப் பொது ஜனங்களிடமிருந்து பெறலாமென்றும் கூறி ஒரு திட்டமிட்டு அதை அவருக்கு விளக்கிக் கூறிக் கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் மாமாவும், ஸ்ரீநிவாஸாச்சாரியாரும் அங்கு வந்து சேர்ந்தனர். எனது திட்டத்தைக் கேட்டு மாமா 'கலகலென' நகைத்தார். பிள்ளைவாள், நாங்கள் ஒரு பத்திரிகை நடத்தவே திண்டாடும்போது இருபத்தேழு பாஷைகளில் பத்திரிகை நடத்துவது என்பது சாமான்யமா? அதற்கு எவ்

வளவு ஆள் வேண்டும்? எவ்வளவு பணம் வேண்டும்? இதெல்லாம் நடக்கிற காரியமா, ஓய்? எனக் கேட்டார்.

எனக்கு மாமா மீது கோபம் வந்து விட்டது. "பாரதி! ஊரை ஆள ஒரு பத்திரிகை போதும். உலகத்தை ஆள எவ்வளவு பத்திரிகைகள் வேண்டும்?" என்று கூறி என்னவோ சுடு சொற்கள் சிலவும் கூறிவிட்டேன். மாமாவின் மணி வாக்கு என்னமோ உண்மையாய்த்தான் ஆயிற்று. ஆனால் எனது பத்திரிகைத் திட்டந்தான் பொய்த்துப் போயிற்று.

## வ. வே. சு ஐய்யரும், வ. உ. சியும்

நான் புதுவையில் மாமாவீட்டில் தங்கியிருந்த காலத்தில் நண்பர் வ. வே. சுப்பிரமணிய ஐயர் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து எங்களுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். அவரது எளிய உடைபாவனைகளும், உள்ளும் புறமும் ஒத்த பேச்சும் அவருடைய தேசாபிமான நிறைவும் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

கலெக்டர் மிஸ்டர் ஆஷ் துரை கொலை சம்பந்தமாக நான் ஏற்கெனவே அறிந்தவற்றைப் புதுவை நண்பர்களிடம் தெரிவித்து ஒப்பிட்டு உண்மையறிந்தேன். ஓட்டப்பிடாரம் மாடசாமிப் பிள்ளையையும் கண்டு பேசினேன்.

**"மானம் பெரிது, பெரிது மானம்!"**

புதுச்சேரியில் பாரதியார் முலியோருடன் நான் தங்கியிருந்த நாட்கள்,

> "தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையவர்
> இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
> நுகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
> உம்பர் உறையும் பதி"

என்னும் பாவை அடிக்கடி நினைக்கவும்,

> "உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில்"

என்னும் பாவின் உண்மைப்பொருளைக் காணவும் செய்தன. கடைசியாக பாரதியார் முதலிய உண்மை அறிஞர்களையும் உண்மைத் தேசாபிமானிகளையும் மிக வருத்தத்தோடு பிரிந்து சென்னை வந்து சேர்ந்தேன்.

நான் தோற்றுவித்த கப்பல் கம்பெனி நசித்த பின் எங்கள் கம்பெனியைச் சேர்ந்த ஒரு கப்பலை எங்கள் எதிரியான பி. ஐ. எஸ். என் கம்பெனியாரிடமே அப்போதிருந்த சுதேசிக் கப்பல் கம்பெனி அதிகாரிகள் விற்றுவிட்டது எனது உடைந்த மனத்தில் உதிரம் பெருகச் செய்தது. இது பற்றி மாமாவிடம் நான் பிரஸ்தாபித்த போது அவர் ஆவேசம் கொண்டு சொல்லிய சொற்கள்தான் நான் புதுவையைப் பிரியும்போது என் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருந்தன. அவை :

"சிதம்பரம், மானம் பெரிது! மானம் பெரிது! ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக்கப்பலை விற்றுவிட்டார்களே, பாவிகள். அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொருக்கி வங்காளக் குடாக்கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட்டாலா தமிழ்நாடு அழிந்து விடும்? பேடிகள்!" என்று எவ்வளவோ கடுஞ் சொற்கள் கூறினர். என் செய்வது? தமிழ்

நாடு உயரவில்லை என்று தான் சொல்ல வேண்டும். புதுவையிலிருந்து நான் என்னுடன் கொண்டுவந்தவை புஸ்தகங்கள் படுக்கைகள் மட்டுமல்ல; மாமாவின் இந்த மணிவாசகமும் தான்!

கடைசியாகக் கண்டது

பின்னர் பல வருஷங்களுக்குப் பிறகு சென்னையைச் சேர்ந்த பெரம்பூரில் நான் வசித்துக்கொண்டிருந்த போது ஒருநாள் நான் திருவல்லிக்கேணி முதலான இடங்களுக்குப் போய்விட்டு இரவு சுமார் பத்து மணிக்கு என் வீடு வந்து சேர்ந்தேன். என் வீட்டுத் தார்சா (வராந்தா) வில் இருவர் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தனர். வந்தவுடன் நான் கைகால் கழுவிவிட்டு வீட்டுக்குள் சென்றேன். சாப்பாடு போடும்படி என் மனைவி மீனாக்ஷியிடம் கூறினேன். அவள் இலை போட்டுப் பறிமாறியதும் நான் சாப்பிட ஆரம்பித்தேன். சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது தார்சா வில் தூங்குபவர்கள் யார் என விசாரித்தேன்.

“ உங்கள் மாமனூர் பாரதியாரும், அவருடன் வந்துள்ள யாரோ ஒரு சாமியாரும்” என்றனள் என் மனையாள்.

“ எப்போது வந்தார்கள் ? என்றேன்.

“ இரவு எட்டு மணிக்கு வந்தார்கள். வரும் பொழுதே மாமா உங்களைத் தேடிக்கொண்டு வந்தார்” என்ருள்.

“ இருவரும் சாப்பிட்டார்களா? விசாரித்தாயா ?” என்று வினவினேன்.

“ வந்ததும் உங்களை எங்கே யென்றும், எப்பொழுது வருவீர்கள் என்றும் கேட்டார்கள். பட்டினம் போயிருக்கிருர்கள் என்றேன். நான் சொல்வதற்குள்ளாக எப்பொழுது சிதம்பரம் பிள்ளை வருவார், மீனுக்ஷி ? என்று மீண்டும் கேட்டார். 10-மணிக்கு வருவார்கள் என்றேன். எங்களுக்குப் பசிக்கிறது, முதலில் சோறு போடு என்ருர்கள். போட்டேன், இருவரும் சாப்பிட்டனர். சாப்பிட்டுவிட்டு நீங்கள் வந்தவுடன் அவர்களை எழுப்பும்படி சொல்லிவிட்டுப் பாயும் தலையணையும் கேட்

டார்கள். படுக்கையை எடுத்துக்கொடுத்தேன். வாங்கிகொண்டு தார்சாவிற்குச் சென்றுவிட்டார்கள்" என்றாள்.

நான் அவசர அவசரமாக எனது சாப்பாட்டை முடித்துக்கொண்டு தார்சாவுக்கு வந்து "மாமா, மாமா!" என உரக்க எழுப்பினேன். இருவரும் எழுந்துவிட்டனர்.

க்ஷேமம் விசாரித்தேன். க்ஷேமத்தையும் தாம் வந்த வரலாறுபற்றியும் கூறினார் மாமா. புதுச்சேரியில் வசித்துவந்த பல இந்திய நண்பர்களின் க்ஷேமத்தையும் விசாரித்தேன்; மாமா பதில் அளித்துக்கொண்டே வந்தார்.

"சுவாமிகள் யாரோ?" என்றேன்.

"ஒரு பெரியவர்" என்றார் மாமா. அதற்குமேல் துளாவித் துளாவிக் கேட்க நான் விரும்பவில்லை; பேசாதிருந்துவிட்டேன். ஆனாலும் என் மனச்சாட்சி அந்த மனிதனைப்பற்றி என் மனதில் ஏதோ ஒரு பீதியை எழுப்பியது. இதற்கு ஆதாரமும் இல்லாமல் இல்லை. மாமா முகத்தில் ஏதோ மாற்றம் இருப்பதாக

எனக்குத் தோன்றியது. பழைய உத்ஸாகத்தையும், முகமலர்ச்சியையும், கண்களின் வீரப்பொலிவையும் கண்டிலேன். பேச்சும் ஒரு புது மாதிரியாக இருந்தது. சம்பந்தா சம்பந்தமில்லாமல் அவர் பேசுவதாகவும் எனக்குப் பட்டது. ஆனால் காரணம் தெரிந்திலேன். பொது விஷயங்களைப்பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பின் துயின்றோம்.

## மாமாவின் மாற்றம் : சாமியாரின் தோற்றம்

மறுநாட் காலையில் நாங்கள் எழுந்ததும் மாமா தம்முடன் வந்திருந்த சாமியாருக்கு எண்ணெய் ஸ்நானம் செய்துவைத்து வேறு வேஷ்டி கொடுக்கவேண்டுமென எனக்குக் கட்டளையிட்டார். அந்தச் சாமியாரின் கீல் எண்ணெய் மேனியில் கால் அங்குலக் கனம் அழுக்குப் படிந்திருப்பதைக் கண்டேன். சாமியாரைக் குளிக்கக் கூப்பிட்டேன். சாப்பாடான பிறகு குளிக்கலாம் என்றார் ; மாமாவும் அதை ஒப்புக்கொண்டுவிட்டார்.

காலைக் காப்பி சாப்பாடு முடிந்ததும் சாமியார் குளிப்பதற்காக வானவெளிக்குச் சென்றார். பக்கத்தில் ஒரு செப்புப் பானையில் வெந்நீர் இருந்தது. இரு வேலைக்காரர்களும் சாமியாரைக் குளிப்பாட்டுவதற்குத் தயாரா யிருந்தனர். நான் மேல் பார்வையிட்டுக் கொண்டிருந்தேன்.

சாமியார் அழுக்கேறிய தனது வேஷ்டியைக் களைந்து வைத்தார். அவரது அரைஞாணில் பல பல துணி முடிச்சுக்கள் தொங்கிக்கொண் டிருந்தன. அவற்றில் ரூபாய் இருந்தது.

அவற்றை அவிழ்த்துவிடும்படி நான் வேலைக்காரர்களிடம் கூறியபோது சாமியார் ஏதோ மறுத்தார். பயப்படவேண்டாம் என்றும், அவர் பணத்தை யாரும் எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்றும், அவர் முன் னேயே வைத்திருந்து குளித்துவிட்டு வந்த தும் அவரிடம் நானே கொடுத்துவிடுவதாக வும் நான் கோபத்துடன் கூறவே சாமியார் அடங்கிவிட்டார்.

பின்னர் வேலையாட்கள் அவருக்கு எண்ணெய் ஸ்நானம் செய்துவைத்தனர். கடையிலிருந்து ஏற்கெனவே வாங்கிவந்து வைத்திருந்த ஒரு ஜோடிப் புது வேஷ்டிகளையும், சாமியாரது பணமுடிச்சுக்களையும் நான் அவரிடம் கொடுத்ததும் சாமியாருக்குப் பரமானந்தம்!

மூவரும் மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டோம். சிரம பரிகாரத்தின் பொருட்டு மூவரும் படுத்து உறங்கினோம்.

மாலை சுமார் 3-மணிக்கு அவர்களிருவரும் பேயிரைச்சலிட்டு வார்த்தையாடிக் கொண்டிருப்பதைக் கேட்டு நான் விழித்துக்கொண்டேன். ஒரு சிறு "அமிருதாஞ்சன்" டப்பாவிலிருந்து ஏதோ ஒரு லேகியத்தை எடுத்து ஆளுக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு வாயில் போட்டுக்கொண்டனர். அவர்கள் கொம்மாளம் அதிகமாயிற்று.

"அது என்ன மாமா?" எனக் கேட்டேன்.

" அதுவா, மோக்ஷ லோகத்திற்குக் கொண்டு போகும் ஜீவாம்ருதம்'' என்றார் மாமா. எனக்கு விஷயம் விளங்கி விட்டது.

" அட பாபிகளா! எலுமிச்சங்காய் அளவா? நீங்கள் நாசமா......''

" எல்லாம் உனக்குப் பயந்துதான் இந்தச் சிறிய அளவு. இல்லாவிட்டால்......'' என்று சாமியார் முதுகில் ஒரு அடி கொடுத்துக் கொண்டே மாமா வெறிபிடித்தவன் மாதிரிச் சிரித்தார்.

மாமாவின் மாற்றத்திற்கு இம்மருந்துதான் காரணம் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. இருந்தும் பலவாறு பேசியும், பாடியும் அன்று மாலையையும், என் வீட்டில் பொழுது போக்கிக் கழித்தோம்.

சாமியார் சரீர கனத்திலும், லேகியம் தின்பதிலும் தவிர மற்றபடிப் பேச்சு முதலியவற்றில் மக்காகவே இருந்தார். அறிவின் சிகரமான மாமாவுக்கு இந்த மக்கினிடத்தில் எவ்வாறு பற்று உண்டாயிற்று என்று அதிசயித்தேன்.

மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு பாரதியாரின் அத்தியந்த நண்பரும், என் நண்பருமான ஜார்ஜ் டவுன் வக்கீல் எஸ். துரைசாமி ஐயர் வீட்டிற்குச் சென்றோம். ஐயர் வீட்டில் இல்லை. எனவே நாங்கள் மூவரும் ஐயர் வீட்டு மாடிக்குச் சென்று அங்கிருந்த கட்டில்களில் படுத்துக்கொண்டு கண் துயின்றோம்.

மாலை மூன்று மணி சுமாருக்கு முதல் நாளைப் போலவே சாமியாரும், மாமாவும் உல்லாசமாகச் சப்தமிடுவதைக் கேட்டு நான் விழித்தேன். முந்திய தினத்தைப் போலவே தகர டப்பாவிலிருந்த லேகியம் அவ்விருவரது வயிற்றிலுமாகச் 'சமாப்தி' யாகியது. தலையில் அடித்துக்கொண்டு பேசாதிருந்துவிட்டேன்.

இதற்குள்ளாக வக்கீல் ஐயரும் வந்து சேர்ந்தார். அவருடன் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்துவிட்டு நான் அம்மூவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு பெரம்பூரில் உள்ள என் வீடு போய்ச்சேர்ந்தேன்.

பின்னர் அவ்வப்போது சென்னையில் நான் 'சுதேசமித்திரன்' பத்திரிகை ஆபீசுக்குப் போயிருந்த சமயங்களிலெல்லாம் அங்கு உதவி ஆசிரியராக இருந்த மாமாவைக்கண்டு பேசியிருக்கிறேன். அருமை மாமாவின் எழுத்துக்கள் 'மித்திரன்' வாயிலாக எனக்கு ஆனந்தம் ஊட்டி வந்தன.

மாமா மறைந்தார்; மாண்பு மணத்தது!

கொஞ்ச நாளில் மாமா காலஞ் சென்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டேன். துக்கக் கடலில் ஆழ்ந்து தத்தளித்தேன். 'நல்லார்க்கு அதிக காலம் இல்லை போலும்!' என நினைத்தேன்.

மாமா இவ்வுலகைவிட்டு மறைந்து விட்டாலும் அவரது தேசீய கீதங்களும், மற்றைய பாடல்களும், கதை - கட்டுரைகளும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்துப் புகழ் வீசும் என்பதில் ஐயமில்லை. அவருடைய பெயர் தேசாபிமானிகளுடைய சரித்திரத்தில்மட்டுமல்லாமல் கவிதா-மேதைகளின் சரித்திரத்திலும் வைரம் என ஒளிவிடும்.

அவருடைய பாடல்களின் அருமை பெரு மையையும் சிறிது இயம்ப வேண்டும் என நினைத்தேன். ஆனால் எனக்கு ஆற்றலின்மையாலும் அவகாச மின்மையாலும் அவ்வேலையில் புகாது நின்று, கவிச்சக்ரவர்த்தி சுப்பிர மணிய பாரதியின் பாடல்களையே நம் தேசத்து மக்கள் என்றென்றும் படித்துவர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**வந்தே மாதரம்! வாழ்க பாரதி!**

## மஹாதேவ தேசாய்

மகாத்மாவின் அந்தரங்கக் காரியதரிசியாக இருந்து 'ஆகாகான் அரண்மனை' என்ற சிறையில் உயிர் நீத்த தியாகமூர்த்திக்கு மஷ்ரூவாலா, சரோஜினிதேவி, பியாரேலால், ஜி. டி. பிர்லா, சுசிலா நையார் முதலான தேசபக்த சிரோமணிகள் சூட்டிய நினைவு மாலை. வர்தா ஆசிரம வெளியீடாக ஹிந்தியில் வருகிறது; அதன் தமிழுருவம் இது.

ரூ. 2

பிரகதியில் தயாராகிறது!



முதல் இந்திய ஹைகோர்ட்டு ஜட்ஜ்

“சர் டி. முத்துசாமி ஐயர்”

:: முதல் தரமான தமிழ்ப் படம் ::